# Final apprehended domestic violence order

*Crimes (Domestic and Personal Violence) Act 2007*

இந்த ஆவணம் ஒரு சட்ட ஆவணம் அல்ல. நீதிமன்றத்தின் உத்தரவை நீங்கள் புரிந்துகொள்வதற்கு உதவும் நோக்கம் கொண்டிருக்கின்றது.
நீங்கள் காவல்துறை / நீதிமன்ற உத்தரவுகளைப் பின்பற்ற வேண்டும். காவல்துறை / நீதிமன்ற உத்தரவுகளைப் பின்பற்றாமை ஒரு குற்றவியல் குற்றம் ஆகும்.

**நீங்கள் கீழ்க்காணும் ஆணைகளைப் பின்பற்ற வேண்டும். இந்த ஆணைகளைப் பின்பற்றாமை சட்டத்துக்கு எதிரானது ஆகும். நீங்கள் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு, குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படலாம். நீங்கள் நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் காணப்பட்டால், 2 வருடங்கள் வரை சிறை செல்ல நேரிடலாம். அத்துடன் 5,500 டாலர் வரை அபராதம் விதிக்கப்படலாம்.**

**நீங்கள் ஏனைய குற்றச் செயல் தொடர்பாகவும் குற்றம்சாட்டப்பட்டு, நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படலாம். இந்தக் குற்றங்கள் தொடர்பாக நீதிமன்றத்தினால் நீங்கள் குற்றவாளி எனக் காணப்பட்டால், உங்களுக்கு அதிக அபராதம் விதிக்கப்படும் வாய்ப்புள்ளது .**

நீங்கள் ஆணையில் கொடுக்கப்பட்டுள்ள தேதி வரை அதிலுள்ள உத்தரவுகளைப் பின்பற்ற வேண்டும்.

இந்த ஆணைகள் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களைப் பாதுகாப்பதற்காக வழங்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பளிக்கப்பட்ட நபர் நீங்கள் இந்த ஆணைகளைப் பின்பற்ற வேண்டியதில்லை எனக் கருதினாலோ அல்லது குறிப்பிட்ட ஆணைகளை நீங்கள் பின்பற்றத் தேவையில்லை என்று உங்களிடம் சொன்னாலும்கூட, நீங்கள் இந்த உத்தரவுகளைப் பின்பற்ற வேண்டும். நீங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைச் செய்ய முயற்சித்தால் ஆணையை மீறுதல் என அழைக்கப்பட்டு சட்டத்திற்கு எதிரானதாகக் கருதப்படும்.

## நடத்தை பற்றிய ஆணைகள்

1. பாதுகாப்பளிக்கப்பட்டவர்களுக்கு அல்லது அவர்கள் குடும்ப உறவைப் பேணும் எவருக்காவது நீங்கள் பின்வருவனவற்றைச் செய்யக்கூடாது:

    A) அவர்களைத் தாக்குதல் அல்லது மிரட்டுதல்,

B) அவர்களைப் பின்தொடர்தல், தொல்லை கொடுத்தல் அல்லது பயப்படுத்துதல், மற்றும்

C) பாதுகாப்பளிக்கப்பட்ட நபருக்குச் சொந்தமான ஏதாவது சொத்துக்களை அல்லது அவருடைய உடைமைகளை வேண்டுமென்றோ அல்லது பொறுப்பற்ற முறையிலோ அழித்தல் அல்லது சேதப்படுத்தல்.

உதாரணமாக:

- நீங்கள் இந்த விடயங்களை நேரடியாகவோ, மற்றொரு நபர் மூலமோ, அல்லது மின்னணு தகவல் மற்றும் சாதனங்கள் மூலமாகவோ செய்யக்கூடாது.( உதாரணமாக தொலைபேசி, குறுஞ்செய்திகள், மின்னஞ்சல்கள், பேஸ்புக் அல்லது மற்ற சமூக ஊடகங்கள், அல்லது ஜிபிஎஸ் மூலம் பின்தொடர்தல்).
- எந்த வழியிலும் தங்களுடைய உடமைகள் பாதிக்கப்படலாம் அல்லது அவர்களுக்குத் தீங்கு செய்யப்படலாம் என பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள நபர் பயப்படும் அல்லது உணரும் வகையில் நீங்கள் எதையும் செய்யவோ சொல்லவோ கூடாது .இதில் கூட்டாகச் சொந்தமான சொத்துக்கள் மற்றும் செல்லப்பிராணிகளும் அடங்கும்.

## தொடர்பு பற்றிய ஆணைகள்

2. ஒரு வழக்கறிஞர் மூலமேயன்றி, பாதுகாக்கப்பட்டவர்களை, நீங்கள் அணுகவோ அல்லது எந்த வழியிலும் அவர்களுடன் தொடர்பு கொள்ளவோ முடியாது.

உதாரணமாக :

- பாதுகாக்கப்பட்டவரை நேரடியாகவோ அல்லது மின்னணு தகவல் மற்றும் சாதனங்கள் மூலமாகவோ (உதாரணமாக, தொலைபேசி, குறுஞ்செய்திகள், மின்னஞ்சல்கள் அல்லது முகநூல் அல்லது மற்ற சமூக ஊடகங்கள்) அல்லது அவர்களைத் தொடர்பு கொள்ள வேறு யாரையாவது கேட்டல் உட்பட வேறு எந்த விதமாகவும் நீங்கள் அவர்களைத் தொடர்பு கொள்ளவோ அணுகவோ முடியாது.

- காக்கப்பட்ட நபர் உங்களைத் தொடர்பு கொண்டு நீங்கள் அதற்குப் பதிலளித்தால், அவர்கள் எத்தனை முறை  தொடர்பு கொண்டாலும் அல்லது அப்படிச் செய்வதற்குக் காரணமிருந்தாலும் நீங்கள் இந்த ஆணையை மீறுபவர் ஆவீர்கள்.

3. நீங்கள் பின்வருவனவற்றை அணுகக்கூடாது:

A) பாதுகாக்கப்பட்ட நபர் கல்வி கற்பதற்காகச்  செல்லக்கூடிய பள்ளி அல்லது வேறு இடம்,

B) குழந்தைகளைக் கவனித்துப் பேணுவதற்காக அவர்கள் செல்லக்கூடிய ஏதாவது இடம் அல்லது

C) ஆணையில் பட்டியலிடப்பட்ட வேறு ஏதாவது இடம்.

உதாரணமாக :

- இந்த இடங்களை நீங்கள் நேரடியாக அணுகக்கூடாது,
- பள்ளி நிகழ்ச்சி, பள்ளிச் சிறப்பு நிகழ்வு அல்லது பள்ளியில் நடைபெறுகிற ஆசிரியர் பெற்றோர் இரவு செயல்பாடு ஆகியவற்றில் நீங்கள் கலந்துகொள்ள  முடியாது என்பது தான் அர்த்தம்.

4. நீங்கள் மது அருந்திய பின் அல்லது சட்டவிரோதமான போதை மருந்துகள் எடுத்த பின்னர், குறைந்தது 12 மணித்தியாலங்கள் பாதுகாக்கப்பட்ட நபரை அணுகக்கூடாது அல்லது அவருடன் இருக்கக் கூடாது.

உதாரணமாக :

- நீங்கள் மது அருந்திய பின்னரோ அல்லது சட்டவிரோதமான போதை மருந்துகள் எடுத்த பின்னரோ குறைந்தது 12 மணித்தியாலங்கள் பாதுகாக்கப்பட்ட  ஆளை

அணுகக் கூடாது அல்லது அவருடன் இருக்கக் கூடாது. உதாரணமாக, நீங்கள் இரவு 9 மணிக்கு உங்கள் கடைசி மதுபானத்தை அருந்தினால் அடுத்த நாள் காலை 9  வரை நீங்கள் அவர்களையோ, அவர்களுடைய வீட்டையோ  அல்லது அவர்களுடைய தொழிலையோ  அணுக முடியாது. நீங்கள் ஒன்றாக வாழ்ந்தால்  இந்த 12 மணி நேரமும் நீங்கள் தங்குவதற்கு வேறு எங்காவது இடம் கண்டுபிடிக்க வேண்டும்.

- நீங்கள் பாதுகாக்கப்பட்ட நபருடன் மது அருந்தக் கூடாது அல்லது  சட்டவிரோதமான போதை மருந்துகள் எடுக்கக் கூடாது.
- நீங்கள் அப்படி விலகியிருக்கத் தேவையில்லை என்று அவர்கள் சொன்னாலும்கூட நீங்கள் விலகியே இருக்க வேண்டும்.

5. ஒரு நீதிமன்றம் உத்தரவிட்டால் அன்றி பாதுகாக்கப்பட்ட நபரைக் கண்டுபிடிக்க முயற்சி செய்யக் கூடாது.

உதாரணமாக:

- நீங்கள் பாதுகாக்கப்பட்ட நபரை மின்னணுத் தகவல் தொடர்பு மூலம் எடுத்துக்காட்டாக தொலைபேசி, மின்னஞ்சல்கள், குறுஞ்செய்திகள், முகநூல் அல்லது மற்ற சமூக ஊடகங்கள் மூலம்) இணையம் அல்லது அவர்கள் இருக்குமிடம் தெரிந்த எவரிடமும் கேட்டுக் கண்டுபிடிக்கக் கூடாது.

## குடும்பச் சட்டம் மற்றும் குழந்தை வளர்ப்பு பற்றிய ஆணைகள்

6. தொடர்பு பின்வரும் வழியில் இருந்தாலன்றி நீங்கள் பாதுகாக்கப்பட்ட நபரை அணுகக்கூடாது அல்லது எந்த வழியிலும் அவர்களுடன் தொடர்பு கொள்ள முடியாது.

❑ A) ஒரு வழக்கறிஞர் மூலம், அல்லது

❑ B) சான்றுறுதி பெற்ற அல்லது நீதிமன்றத்தினால் ஒப்புக்கொள்ளப்பட்ட அறிவுரை /ஆலோசனை, மத்தியஸ்தம் மற்றும் / அல்லது சமரசம், ஆகியவற்றில் கலந்து கொள்ள அல்லது

❑ C) குழந்தை / கள் உடன் தொடர்பு கொள்தல் தொடர்பாக இந்த அல்லது மற்றொரு நீதிமன்றம் உத்தரவிட்டதற்கு அமைய அல்லது

❑ D) குழந்தை / கள் உடன் தொடர்பு கொள்தல் தொடர்பாக பெற்றோர் (கள்) மற்றும் உங்களுக்கு இடையே உள்ள எழுத்துபூர்வமான உடன்பாடு

அல்லது

❑ E) குழந்தை / கள் உடன் தொடர்பு கொள்தல் தொடர்பாகப் பெற்றோர் (கள்) மற்றும் குழந்தை / கள் தொடர்பு பற்றிப் பொறுப்பு கொண்ட நபர் மற்றும் உங்களுக்கு இடையே செய்துகொள்ளப்பட்ட எழுத்துபூர்வமான உடன்பாடு,

உதாரணமாக:

- பாதுகாக்கப்பட்டவரை நேரடியாகவோ  அல்லது மின்னணு தகவல் மற்றும் சாதனங்கள் மூலமாகவோ (உதாரணமாக, தொலைபேசி, குறுஞ்செய்திகள், மின்னஞ்சல்கள் அல்லது முகநூல்  அல்லது மற்ற சமூக ஊடகங்கள்) அல்லது அவர்களைத் தொடர்பு கொள்ளுமாறு வேறு யாரையாவது கேட்டல் உட்பட  வேறு எந்த விதமாகவும்  நீங்கள்அவர்களைத் தொடர்பு கொள்ளவோ அணுகவோ முடியாது.

- காக்கப்பட்ட நபர் உங்களைத் தொடர்பு கொண்டு, நீங்கள் அதற்குப் பதிலளித்தால், அவர்கள் எத்தனை முறை  தொடர்பு கொண்டாலும் அல்லது அப்படிச் செய்வதற்குக் காரணமிருந்தாலும் நீங்கள் இந்த ஆணையை மீறுபவர் ஆவீர்கள். இதற்காக நீங்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படலாம்.

- உங்கள் குழந்தை / கள் தொடர்பான பேணுதல் பற்றி  ஒரு குடும்பச் சட்ட ஆணை அல்லது வேறு ஏதாவது நீதிமன்ற உத்தரவு இருந்தால், நீங்கள் என்ன செய்யலாம் மற்றும் என்ன செய்ய முடியாது என்பது பற்றி ஏதாவது சந்தேகம் இருந்தால் நீங்கள் ஒரு வழக்கறிஞருடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

(B): குடும்பச் சட்ட விடயங்களுக்காக, சான்றளிப்பு என்பதன் அர்த்தம் குடும்பச் சட்டம் 1975 கீழ் சான்றளிப்புப் பெற்றது என்பதாகும்.

(E): உதாரணமாக: உங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட நபருக்கும் ஒரு குழந்தை / கள் இருந்தால் ஆனால் உங்கள் குழந்தைக்கு /களுக்கு வேறு ஒருவரிடம் பெற்றோர் பொறுப்பு உள்ளது என்றால், குழந்தை / கள் உடைய தொடர்பு பற்றி அவர்களின் ஒப்பந்தத்தை எழுத்தில் பெற வேண்டும். மற்ற நபர் குடும்ப மற்றும் சமூக சேவைகள் மந்திரியின் பிரதிநிதியாகவோ, நீதிமன்ற உத்தரவினால் நியமிக்கப்பட்ட சட்டப்பூர்வ பாதுகாவலராகவோ அல்லது ஒரு வளர்ப்பு பெற்றோராகவோ இருக்க முடியும்

## நீங்கள் எங்கே போக முடியாது என்பது பற்றிய ஆணைகள்

7. நீங்கள் பின்வரும் இடங்களில் வாழக் கூடாது:

   A) பாதுகாக்கப்பட்ட நபருடைய முகவரி, அல்லது

   B) இந்த ஆணையில் பட்டியலிடப்பட்ட எந்த இடத்திலும்.

உதாரணமாக:

- நீங்கள் இந்த முகவரியில் வாழ்ந்து கொண்டிருந்தால், உங்கள் உடமைகள் அல்லது சொத்துக்களை எடுக்க வேண்டும் எனில், இதற்காக நீங்கள் ஒரு ஆணைக்கு நீதிமன்றத்தில் விண்ணப்பிக்கலாம், இது ஒரு சொத்து மீட்பு ஆணை என்று அழைக்கப்படும். அல்லது நீங்கள் காவல்துறையை தொடர்பு கொள்ளலாம்.

8. நீங்கள் பின்வரும் இடங்களுக்குப் போகக் கூடாது:

   A) பாதுகாக்கப்பட்ட நபர் வசிக்கும் இடம், அல்லது

   B) அவர்கள் வேலைசெய்யும் இடம், அல்லது

   C) இந்த ஆணையில் பட்டியலிடப்பட்ட இடம்:

உதாரணமாக:

- நீங்கள் அந்த இடங்களின் எல்லைக்குள் செல்ல அனுமதி இல்லை.
- நீங்கள் இந்த முகவரியில் வாழ்ந்து வந்தால், உங்கள் உடமைகளை எடுக்க வேண்டும் எனில், நீங்கள் ஒரு சொத்து மீட்பு ஆணைக்கு நீதிமன்றத்தில் விண்ணப்பிக்கலாம். அல்லது நீங்கள் காவல்துறையை தொடர்பு கொள்ளலாம்.

9. இந்த ஆணையில் மீட்டர் அளவில் குறிப்பிடப்பட்டுள்ள தூர எல்லைக்குள் போகவேண்டாம்:

A) பாதுகாக்கப்பட்ட நபர் வசிக்கும் எந்த இடத்திற்கும், அல்லது

B) அவர்கள் வேலை செய்யும் எந்த இடத்திற்கும், அல்லது

C) ஆணையில் பட்டியலிடப்பட்டுள்ள எந்த இடத்திற்கும்.

உதாரணமாக :

- நீங்கள் அந்த இடங்களின் எல்லையின் 100 மீட்டருக்கள் செல்ல அனுமதி இல்லை.
- நீங்கள் இந்த முகவரியில் வாழ்ந்து வந்தால், உங்கள் உடமைகளை எடுக்க வேண்டும் எனில், நீங்கள் ஒரு சொத்து மீட்பு ஆணைக்கு நீதிமன்றத்தில் விண்ணப்பிக்கலாம். அல்லது நீங்கள் காவல்துறையை தொடர்பு கொள்ளலாம்.

## ஆயுதங்கள் பற்றிய ஆணைகள்

10. ஆயுதங்கள் தடைச் சட்டம் 1998 இல் பட்டியலிடப்பட்ட துப்பாக்கி அல்லது ஆயுதங்கள் எதையும் வைத்திருக்க அனுமதி இல்லை.

உதாரணமாக :

இந்த ஆவணம் ஒரு சட்ட ஆவணம் அல்ல. நீதிமன்றத்தின் உத்தரவை நீங்கள் புரிந்துகொள்வதற்கு உதவும் நோக்கம் கொண்டிருக்கின்றது.
நீங்கள் காவல்துறை / நீதிமன்ற உத்தரவுகளைப் பின்பற்ற வேண்டும். காவல்துறை / நீதிமன்ற உத்தரவுகளைப் பின்பற்றாமை ஒரு குற்றவியல் குற்றம் ஆகும்.

- நீங்கள் ஆயுதங்கள் தடைச் சட்டம் 1998 ன் கீழே அனுமதி இல்லை எனப் பட்டியலிடப்பட்ட துப்பாக்கி மற்றும் அனைத்து ஆயுதங்களையும் காவல்துறையிடம் ஒப்படைக்க வேண்டும். அவற்றை வைத்திருப்பது ஒரு தனிக் குற்றமாகும். நீங்கள் வைத்திருக்கக் கூடாது என்று குறிப்பிடப்படும் ஆயுதங்கள் பற்றி உங்களுக்கு உறுதியாகத் தெரியவில்லை என்றால் காவல்துறை அதிகாரியைக் கேளுங்கள்.

**பிற உத்தரவுகள்**

11. காவல்துறை மற்றும் நீதிமன்றம் உங்களுக்கு அல்லது உங்கள் குடும்பத்திற்கு ஏனைய சில குறிப்பிட்ட உத்தரவுகளையும் வழங்கமுடியும்.

**பெரும்பாலான உறவுகள் பயம், கட்டுப்பாடு அல்லது வன்முறை ஆகியவற்றை உள்ளடக்குவதில்லை. எனவே உங்கள் செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது. இப்போது இந்த ஆணை உங்களுக்கு உரியது. நீங்கள் இதற்குக் கீழ்ப்படிய வேண்டும். இந்த ஆணை NSW காவல்துறை கணினியில் உள்ளது.**

வீட்டில் ஏற்படும் வன்முறை எல்லோரையும் பாதிப்பதுடன் சஞ்சலத்திற்கும் உள்ளாக்குகின்றது. குழந்தைகள் வீட்டில் வன்முறையை எதிர்ப்படும் போது, அவர்கள் மிகவும் மன அழுத்தம், கவலை மற்றும் ஆக்ரோஷம் ஆகியவற்றினால் பாதிக்கப்படும் வாய்ப்பு உள்ளது, அத்துடன் பள்ளியிலும் சிரமத்தை எதிர்கொள்ளலாம்.

இது மாற்றம் செய்வதற்காக உங்களுக்கு வழங்கப்படும் ஒரு வாய்ப்பு.

நீங்கள் உங்கள் உணர்வுகளை அல்லது அழுத்தங்களை எவ்வாறு நிர்வகிக்கலாம் என்பது தொடர்பில் யாருடனாவது பேச விரும்பினால், அதற்கான உதவி

NSW Police Force

women's domestic violence court advocacy services

Legal Aid

Womens Domestic Violence Court Advocacy Services are funded by Legal Aid NSW

NSW GOVERNMENT | Justice

# Final apprehended domestic violence order

*Crimes (Domestic and Personal Violence) Act 2007*

இந்த ஆவணம் ஒரு சட்ட ஆவணம் அல்ல. நீதிமன்றத்தின் உத்தரவை நீங்கள் புரிந்துகொள்வதற்கு உதவும் நோக்கம் கொண்டிருக்கின்றது.
நீங்கள் காவல்துறை / நீதிமன்ற உத்தரவுகளைப் பின்பற்ற வேண்டும். காவல்துறை / நீதிமன்ற உத்தரவுகளைப் பின்பற்றாமை ஒரு குற்றவியல் குற்றம் ஆகும்.

கிடைக்கிறது. அழையுங்கள்:

- Men's Referral Service on 1300 766 491 ஆண்கள் ஆதரவை அணுகுவதற்கான ஒரு பரிந்துரைச் சேவை
- Relationships Australia on 1300 364 277 ஒரு குடும்ப ஆதரவுச் சேவை
- The Parent Line on 1300 1300 52 பெற்றோர்களுக்கு ஆதரவு வழங்கும் சேவை

இந்த ஆணையில் சொல்லப்பட்டுள்ளவற்றை நீங்கள் செய்யவில்லையென்றால்:

- நீங்கள் 2 வருடங்கள் வரை சிறை செல்ல நேரிடும். மற்றும் 5,500 டாலர் அபராதம் விதிக்கப்படலாம்.
- நீங்கள் குற்றம் சாட்டப்பட்டு பிற கிரிமினல் குற்றங்களுடன் நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படலாம். (உதாரணமாக, தாக்குதல் அல்லது அச்சுறுத்தல்), அதே போல் இந்த ஆணையை மீறியதற்காகவும். உங்கள் மீதான குற்றங்கள் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டால், மறியலில் இருத்தல் போன்ற அதிக தண்டனைகளை நீங்கள் பெற நேரிடும்:

ஆயுதங்கள் தடைச் சட்டம் 1998 பட்டியலில் அனுமதிக்கப்படாத துப்பாக்கி மற்றும் ஆயுதங்களை உடனடியாகத் தொடர்புடைய உரிமங்களுடன் இணைத்து, நீங்கள் காவல்துறையிடம் கொடுக்க வேண்டும். இவற்றை வைத்திருந்தால், நீங்கள் இந்த ஆணையை மீறியதாகக் கருதப்பட்டு , மேலதிக கிரிமினல் குற்றச்சாட்டுகளைச் சந்திக்க நேரிடும்.

உங்களிடம் இந்த ஆணை பற்றி ஏதேனும் கேள்விகள் இருந்தால், பின்வருபவர்களுடன் நீங்கள் தொடர்பு கொள்ள முடியும்:

- ஒரு வழக்குரைஞர்
- சட்ட உதவி NSW on (02) 9219 5000
- உள்ளூர் பொலிஸ் நிலையத்தை அழைத்து குடும்ப வன்முறை தொடர்பு அதிகாரியைக் கேட்கவும் (நீங்கள் பாதுகாக்கப்பட்ட நபராக இருந்தால்)
- சட்டம் அணுகல், NSW அல்லது 1300 888 529 மீது www.lawaccess.nsw.gov.au
- 131 450 அல்லது www.tisnational.gov.au உரைபெயர்ப்பு சேவைகள்

NSW Police Force

women's domestic violence court advocacy services

Legal Aid NEW SOUTH WALES

Womens Domestic Violence Court Advocacy Services are funded by Legal Aid NSW

NSW GOVERNMENT | Justice